**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

**அசல் வழக்கு எண். 2/2024**

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10 ம் நாள் செவ்வாய் கிழமை PW1 இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்தியசாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. S.மும்தாஜ், B.Sc.,B.L., சார்பு நீதிபதி, சீர்காழி அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு, பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 11.02.2026 | தந்தை/கணவர் பெயர்: | |
| பெயர்: | ராபின்சன் (PW1) | தாலுக்கா: | |
| கிராமம்: | | வயது | |

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் வாதி வங்கியின் கிளை மேலாளர் ஆவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை நிரூபணபிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். நிரூபணபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

14.03.2018 பிரதிவாதியின் எழுதிக் கொடுத்த கடன் மனு வா.சா.ஆ.1 ஆகவும்

26.04.2019 பிராமிசரி நோட் அசல் வா.சா.ஆ. 2 ஆகவும்

26.04.2019 கடன் அனுமதிக் கடிதம் வா.சா.ஆ. 3 ஆகவும்

26.04.2019 கொதுவை ஒப்பந்தம் வா.சா.ஆ. 4 ஆகவும்

26.04.2019 கொதுவை ஒப்பந்தம் வா.சா.ஆ. 5 ஆகவும்

24.01.2022 கடன் உயிர்ப்பு கடிதம் வா.சா.ஆ. 6 ஆகவும்

04.12.2023 அறிவிப்பு வா.சா.ஆ. 7 ஆகவும்

09.12.2023 அஞ்சலக ஒப்புகை வா.சா.ஆ. 8 ஆகவும்

30.11.2023 கணக்கு பேரெட்டு நகல் வா.சா.ஆ. 9 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

தாவா படி தீர்வாக வேண்டுகிறேன்.